புதிய தலைமுறை அறக்கட்டளை

*For Private Circulation only*

# “வள்ளி”

அகமும் புறமும் தூய்மையாகட்டும் ! அதன்வழி
அன்பும் அறனும் தழைத்தோங்கட்டும் !

முனைவர். பி. சத்தியநாராயணன்
நிறுவனர் & அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

## உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த சமுதாய மருத்துவ செய்தி மடல்

## வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்

இதழ்: 1 (புதிய தலைமுறை அறக்கட்டளை) டிசம்பர் 2020 / ஜனவரி 2021



டாக்டர் அ. ரவிக்குமார்
சார்பு துணை வேந்தர்
எஸ்.ஆர்.எம் மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல் துறை
எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக் கல்லூரி



டாக்டர் அ. சுந்தரம்
டீன் (மெடிக்கல்), எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்



டாக்டர். கே. தங்கராஜ்
மருத்துவ கண்காணிப்பாளர்
எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி

எஸ்.ஆர்.எம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு இடையே பொத்தேரியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 45 ஜி.எஸ்.டி சாலையில் 33.61 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

எஸ்.ஆர்.எம் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜியின் பிற நிறுவனங்களான பொறியியல், மேலாண்மை, பல், கலை மற்றும் அறிவியல் மற்றும் பயோடெக்னாலஜி ஆகியவற்றுடன், மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தின் அருகாமையில் அமைந்திருப்பது, கூட்டு ஆராய்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது

காட்டாங்குளத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள மூன்று இலட்சத்திற்க்கும்அதிகமான மக்களுக்கு இந்த மருத்துவமனை சேவை செய்கிறது.

உலகின் தலைசிறந்த ஹார்வேர்டு மருத்துவ பங்குதார குழுமத்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பணியாற்றும் எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் மனித உயிர்காக்கும் அனைத்து சிகிச்சைகளும் ஒரு சேர அளிக்கப்படுகிறது.

24 மணிநேர அவசர மருத்துவம், விபத்து மருத்துவம், அவசர ஊர்தி, மருந்தகம், ஆய்வுக்கூட வசதிகள், கதிரியக்கம் (X -ரே) ஊடு கதிரியக்கம் (ஸ்கேன்), காந்த அதிர்வு அலை (எம். ஆர். ஐ) வசதியும் உள்ளது.

எஸ்.ஆர். எம். மருத்துவமனையில் பதிவு செய்யும் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவம் இலவசம் மட்டுமல்லாது, கர்ப்ப கால மற்றும் பிரசவ கால பராமரிப்பிற்காக நமது வேந்தரின் தாயார் திருமதி. வள்ளியம்மை அம்மாள் அவர்களின் நினைவாக மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தின் மூலம் உதவித்தொகை ரூபாய் 10,000/- வழங்கப்படுகிறது.

## குறைந்த கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவம்... எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில்.....

பாரிவேந்தர் காணொளி மருத்துவ சிகிச்சை மையம் மூலம் வீட்டில் இருந்தபடியே எங்கள் சிறப்பு மருத்துவர்களுடன் காணொளி மூலம் மருத்துவ ஆலோசனை பெறும் வசதியும் இங்கே அமைந்துள்ளது.

இதுவரை இங்கு 1300க்கும் மேற்பட்ட கோவிட்-19 நோயாளிகளுக்கு அலோபதியுடன் கூடிய சித்த மருத்துவமும் கலந்து சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.



இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம், **தேசிய வைராலஜி** நிறுவனம் புனே. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் உருவாக்கிய இந்தியாவின் முதல் சுதேச தடுப்பூசியின் மனித மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஐ.சி.எம்.ஆரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியாவில் உள்ள 12 நிறுவனங்களில் எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றாகும்.

நாட்டின் முதல் உள்நாட்டு கோவிட்-19 தடுப்பூசியின் (COVAXIN/Bharath Bio Tech தடுப்பூசி) மருத்துவ பரிசோதனை தளமாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தால் (ICMR) எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.







தொடர்புக்கு
வள்ளியம்மை அம்மாள் மருத்துவ உதவித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்

ஏ.ஆர். ரமேஷ் கண்ணன்,
அலைபேசி எண் - 9944544299

ஈ.மணிராஜ்
அலைபேசி எண்: 8754417400

## ஆம்பினால் ஆம்னிகனேக்ட் இந்தியா பி.லிட், எஸ்.ஆர்.எம். மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளை இணைந்து வழங்கும் இலவச ஆம்புலன்ஸ்.....

செப்டம்பர் 18, 2020 அன்று புதிய தலைமுறை அறக்கட்டளை, மறைமலைநகரில் உள்ள Amphenol Omniconnect India Pvt. Ltd. என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, அதன் மூலம் ஆம்புலன்ஸ் அன்பளிப்பாகப் பெற்று பொத்தேரியில் உள்ள SRM மருத்துவ கல்லூரி & மருத்துவமனைக்கு வழங்கினார்கள்.



எஸ்.ஆர்.எம்.மருத்துவமனையின் மனிதவள மேம்பாட்டுத்துறை தலைமை அதிகாரி விஷ்ணுபிரியா மற்றும் தினகரன், துணை பொது மேலாளர், எஸ்.ஆர்.எம். மருத்துவமனை ஆகியோரின் சீரிய முயற்சியில் இந்த நன்கொடை நடந்தது.

இந்நிகழ்ச்சி அமெரிக்கன் சாம்பர் ஆப் காமர்ஸ் சார்பில் அதன் சென்னை மண்டல இயக்குனர், ஆப்ரே டேனியல்ஸ், அவர்கள் தலைமை விருந்தினராக மற்றும் எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி & மருத்துவமனை சார்பில், சார்பு துணை வேந்தர் டாக்டர் அ. ரவிக்குமார், டாக்டர் அ. சுந்தரம், Dean (Medical), டாக்டர் கே. தங்கராஜ், (மருத்துவ மேலதிகாரி), டாக்டர் லோகராஜ், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், (கம்யூனிட்டி மெடிசன்), கே. கவிதா, மூத்த மேலாளர் - மனிதவளத்துறை, ஆம்பினால் ஆம்னிகனேக்ட் இந்தியா பி.லிட் முன்னிலை வகித்தனர்.

புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே. வெங்கடகிரி அவர்கள் அனைவரையும் வரவேற்று தொடக்க உரை நிகழ்த்தினார்.

## இலவச ஆம்புலன்ஸ் சேவைக்கு அழைக்கவும்

## 9791938643



ஆம்பினால் ஆம்னிகனேக்ட், எஸ்.ஆர்.எம். மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளை இணைந்து மறைமலை நகர் அண்ணா சாலையில் இலவச ஆம்புலன்ஸ் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதை பொது மக்கள் மருத்துவ சேவைக்கு 24 மணி நேரமும் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த இலவச சேவையை மறைமலை நகர் மக்களின் மருத்துவ சேவைக்காக துவங்கப்பட்டுள்ளது.

## நமது எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில்....

### மருத்துவ சிகிச்சைக்காக இலவச பேருந்து சேவை



மோ. தினகரன்
துணை பொது மேலாளர்
SRM மருத்துவமனை

நோயாளிகளின் நலனில் கவனமும் அக்கறையும் கொண்டுள்ள நமது எஸ்.ஆர்.எம். மருத்துவமனையைச் சுற்றி உள்ள கிராமங்களில் (குறிப்பாக பேருந்து வசதி அதிகம் இல்லாத கிராமங்களில்) உள்ள மருத்துவ நோயாளிகள் தங்களது சிகிச்சைக்காக வந்து செல்லும் வகையில் எஸ்.ஆர்.எம். மருத்துவமனை நிர்வாகம் சார்பில் இலவச பேருந்து சேவை திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை செயல்பட்டு வருகிறது. தேவைப்படும் மருத்துவ நோயாளிகள் இந்த சேவையைப் பயன்படுத்திகொள்ளலாம். இலவச பேருந்து சேவைகள் சென்று வரும் கிராமங்களின் பெயர்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**நோயாளிகளை அழைத்துக்கொண்டு வருவது மட்டுமன்றி சிகிச்சை முடிந்ததும், அவர்களுக்கு மதிய உணவு அளித்து அவர்களின் கிராமங்களுக்கே, திரும்ப பேருந்து மூலம் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.**

| | | | |
|---|---|---|---|
| தண்டராம்பட்டு | உச்சிகுளமேடு | திருமுக்கூடல் | மாம்பாக்கம் |
| தண்டரை | இருமரம் | வையாவூர் | சாலூர் |
| வேடந்தாங்கல் | பெருங்காட்டூர் | தம்மனூர் | திருப்புலிவனம் |
| ஆதவப்பாக்கம் | மாகரல் | கம்பராஜபுரம் | மலையாங்குளம் |
| நாயுடுபாக்கம் | புள்ளம்பாக்கம் | கணபதிபுரம் | புசிவாக்கம் |

மருத்துவ நோயாளிகளின் ஒருங்கிணைப்பாளர் திரு. மாணிக்கம், S.R.M. Health Inspector அவர்களை தொடர்பு கொள்ள: **87544 13133**

| | |
|---|---|
| பொது நோயாளி பிரிவு | காது, மூக்கு, தொண்டை சிகிச்சை |
| மகளிர் பிரிவு | குழந்தைகள் சிகிச்சை |
| சி.டி.ஸ்கேன் | தோல் நோய் சிகிச்சை |
| நரம்பியல் சிகிச்சை | புற்று நோய் சிகிச்சை |
| மகப்பேறு சிகிச்சை | சர்க்கரை நோயின் அளவு கண்டறிதல் |
| சிறுநீர் பரிசோதனை | எம்.ஆர்.ஐ. ஸ்கேன் |
| இ.சி.ஜி. / சுருள் படம் | அனைத்து மருத்துவ உபகரணங்கள் |
| எக்ஸ் ரே (X-Ray) | குடலிறக்கஅறுவை சிகிச்சைக்கு பொருத்தும் வலை |
| முடக்கு வாதம் சிகிச்சை | காச நோய் - பி.சி.ஆர். |
| அறுவை சிகிச்சை | இரத்தத்தில் உப்பின் அளவு கண்டறிதல் |
| எலும்பு சிகிச்சை | அதி நவீன சிகிச்சைப்பிரிவு |
| கண் சிகிச்சை | அடிப்படை மருத்துவ பிரிவு |
| இருதய சிகிச்சை | பொது மருத்துவ சிகிச்சை |





கார்டியாக் பரிசோதனைக் கூடம்



தீவிர சிகிச்சைப் பிரிவு

# மறைமலை நகரில் கொரோனா தடுப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம்


எம். பரந்தாமன்


கே.சந்திரசேகர்


எஸ். ஜவஹர்

செப்டம்பர் 11, 2020 வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டத்தின் மூலம் மறைமலை நகரில் உள்ள ஸ்ரீ நாகவள்ளி அம்மன் கோவில், சிவா விஷ்ணு ஆலயம் மற்றும் மாருதி சபா திருக்கோவிலிலும் கொரோனா தடுப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற்றது. இம்முகாம்களில் கலந்து கொண்ட அனைத்து பொதுமக்களுக்கும் கபசுரக்குடிநீர் மற்றும் முகக்கவசங்களும் இலவசமாக வழங்கப்பட்டது. கோயில்களின் தலைவர்கள் எம்.பரந்தாமன், கே.சந்திரசேகர் மற்றும் எஸ். ஜவஹர் ஆகியோர் பேசுகையில், இம்முகாம்கள் பொதுமக்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றும் கொரோனா நோய் தொற்று காலத்தில் இது போன்ற விழிப்புணர்வு முகாமினை நடத்திய புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு தங்களுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டனர்.

ஸ்ரீ நாகவள்ளி அம்மன் கோவில்



சிவா விஷ்ணு ஆலயம்



மாருதி சபா திருக்கோவில்



## “கொரோனா வந்தால் நாம் பயப்படக்கூடாது. நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.”



ஆகஸ்ட் 12, 2020 அன்று செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூரில் உள்ள அருள்மிகு கல்யாண முருகன் திருக்கோயிலில் நடைபெற்ற முகாமினை **டாக்டர் எம். லோகராஜ், துறைத்தலைவர், SRM Community Medicine** அவர்கள் துவக்கி வைத்து பேசுகையில், முகக்கவசத்தை சிலர் தவறாக பயன்படுத்துகிறார்கள். முகக்கவசத்தை அடிக்கடி தொடுதல் கூடாது, கொரோனா வந்தால் நாம் பயப்படாமல் நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனி அறையில் இருக்க வேண்டும். நம் வீட்டில் இருப்பவர்களும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். காலையில் ஒரு முறையும், மாலையில் ஒருமுறையும் கபசுரக் குடிநீர் (சுடுநீர் கலந்து) குடிக்க வேண்டும் நன்றாக ஓய்வெடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களிடம் கூறினார்.

பின்பு அங்கு வந்திருந்த பொது மக்களுக்கு இலவசமாக கபசுரகுடிநீர், முகக்கவசம் வழங்கினர். அருள்மிகு கல்யாண முருகன் திருக்கோவில் தலைவர் ஈ. தர்மராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற முகாமில், புதிய தலைமுறை அறக்கட்டளையின் திட்டத் தலைவர் எஸ்.இளமாறன் மற்றும் வள்ளியம்மை அம்மாள் மருத்துவ உதவித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர். ரமேஷ் கண்ணன் உடன் இருந்தனர்.


ஈ. தர்மராஜ்





# கொரோனா



| நோயின் அறிகுறிகள் |
|---|
| காய்ச்சல் |
| பசியின்மை |
| மூச்சு விடுவதில் சிரமம் |
| தொண்டை வறட்சி |
| இருமல் |
| உடல் சோர்வு |
| தலைவலி |
| நுகர்வுத்தன்மை இல்லாமை |

| YES செய்ய வேண்டியவை |
|---|
| வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிதல். |
| மற்றவர்களிடம் பேசும் போதும் மற்றும் பழகும் போதும் இரண்டடி விலகல். |
| வெளியில் போய் வீட்டிற்கு வரும் பொழுது கை கால்களை நன்றாக சுத்தம் செய்தல். |
| வெதுவெதுப்பான நீரை அருந்துதல். |
| வெதுவெதுப்பான உப்பு நீரில் வாய் கொப்பளித்தல். |
| இருமல் மற்றும் சளி உள்ள நபர்களிடம் இருந்து விலகி இருத்தல். |
| இருமும் போது கைக்குட்டையை பயன்படுத்தல் |

| NO செய்யக் கூடாதவை |
|---|
| கை குலுக்குவதை தவிர்த்தல் |
| மக்கள் அதிகம் கூடும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்த்தல். |
| வெளியூர் பயணங்களை பெரும்பாலும் தவிர்த்தல். |
| பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்தல். |
| வெளியில் செல்லும் பொழுது முகக்கவசம் கழட்ட கூடாது. |
| பொது இடங்களில் எச்சில் உமிழ்தல் கூடாது. |
| கைகளால் அடிக்கடி முகத்தை தடவுவதை தவிர்த்தல். |

# வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்

## உங்கள் குடும்பத்தின் சுகாதார மதிப்பீடு அட்டை

பெயர்: ______________________________

வயது: ______________ பாலினம் (ஆண் / பெண்)

விலாசம்: ______________________________

______________________________

அலைபேசி எண்: ______________________________

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதில் அனுப்புவோருக்கு பரிசுகள் காத்திருக்கின்றன !**
**பரிசுகள் உங்கள் இல்லத்திற்கே அனுப்பி வைக்கபடும் ! !**

1. சித்தா மருத்துவம் தோன்றிய இடம்

■ கல்வராயன் ■ பழனிமலை ■ அகஸ்தியர் மலை ■ இமயமலை

2. அக்குபஞ்சர் என்ற மருத்துவ முறை எங்கு துவங்கியது.

■ சுவீடன் ■ இந்தியா ■ சீனா ■ ஜப்பான்

3. குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க பயன்படுத்தப்படும் மருந்து எது ?

■ கார்பன் ■ குளோரின் ■ உப்பு ■ புரோமின்

4. இதயத்தின் இயக்கத்தினை பதிவு செய்ய பயன்படும் கருவி என்ன ?

■ ஸ்டெதெஸ்கோப் ■ குரோனா மீட்டர் ■ கிரேஸ்கோசிராப் ■ கார்டியோகிராப்

5. தமிழ்நாட்டின் புராதன மருத்துவ முறை

■ யுனானி ■ சித்த மருத்துவம் ■ ஆயுர்வேதம் ■ ஹோமியோபதி

6. உடல் வெப்பத்தை ஒழுங்குபடுத்தும் ஊட்டச்சத்து எது?

■ புரதம் ■ கார்போஹைட்ரேட் ■ நீர் ■ கொழுப்பு

7. மாரடைப்புக்கு காரணமான உணவுச்சத்து எது ?

■ கொழுப்பு ■ புரோட்டான் ■ கார்போஹைடேரேட் ■ இவற்றில் எதுவுமில்லை

8. டாயாலிசிஸ் உடலில் எந்த பாகம் பழுதடைவதால் செய்யப்படுகிறது?

■ மூளை ■ நுரையீரல் ■ சிறுநீரகம் ■ இதயம்

9. இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து ?

■ சமூக நோய் காரணி ■ எதிர் சீரம் ■ உயிருள்ள தடுப்பூசி ■ கொல்லப்பட்ட தடுப்பூஊசி

10. வைட்டமின் என பெயரிட்டவர் யார் ?

■ வாக்ஸ்மேன் ■ சால்க் ■ சாபின் ■ பங்க்

**உங்கள் பதிலை கீழே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

## சார், கொஞ்சம் சிரிங்க ப்ளீஸ் !



- நோயாளி: டாக்டர், நீங்க எழுதிக் கொடுத்த டானிக்ல காலைல ஒரு மூடி, இரவு ஒரு மூடி சாப்பிட சொன்னீங்க ?

டாக்டர்: ஆமாம்

நோயாளி: ஆனா, அந்த டானிக் பாட்டில்ல ஒரே ஒரு மூடி தானே இருக்கு?

டாக்டர்: ??????

****************

- நோயாளி: டாக்டர் எனக்கு 3 மாசமா கடுமையான இருமல்

டாக்டர்: அப்படியா ? இவ்வளவு நாள் சும்மாவா இருந்தீங்க !

நோயாளி: இல்லை டாக்டர் இருமிக்கிட்டே தான் இருந்தேன்

டாக்டர்: ???????

*Thank you Sponsors*





தொடர்புக்கு: எ. ரேணுகா தேவி




அலைபேசி எண்: 90431 10515

Amphenol

www.amphenol.com



புதிய தலைமுறை அறக்கட்டளை

எண்: 24, ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017

மின்னஞ்சல்: contact@ptfindia.org | வலைதளம்: www.ptfindia.org ; www.isrbexpo.org | அலைபேசி எண்கள்: 8754417500, 8754417308, 8754417338



அச்சிட்டு வெளியிடுபவர் : து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை